**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6**

ந.க.எண்.50510/பிடி2/இ2/2021, நாள். 01.08.2022

*****

**பொருள்:** பள்ளிக் கல்வி - அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத்திட்டத்தினை மறுசீரமைத்தல் - அறிவுரைகள் வழங்குதல் - சார்ந்து.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.173, பள்ளிக்கல்வித் (பக7(1)) துறை நாள்.13.12.2021.
2. சென்னை-6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், ந.க.எண்.50441/இ/இ3/2021, நாள்.13.07.2022.
3. அரசாணை (நிலை) எண்.125, பள்ளிக்கல்வித் (பக7(1)) துறை நாள்.15.07.2022.

*****

2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தொழிற்கல்வி பாடத்திட்டத்தினை சீரமைப்பது சார்ந்து வெளியிட்ட அறிவிப்பில் **"தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்கல்விப் பாடங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உறுதுணையோடு மேம்படுத்தப்படும். இதனால் மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப திறனைப்பெற்று உடனடி வேலைவாய்ப்பினைப் பெறுவர்"** எனத் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை சீரமைக்க (Revamping of Vocational Syllabus and Textbook) உயர்மட்ட வல்லுநர் குழு அமைத்து பார்வை 1இல் கண்ட அரசாணை வெளியிடப்பட்டது.

இவ்வல்லுநர் குழு மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (TNSDC) இணைந்து 12 தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் கீழ்க்கண்ட 8 பாடப்பிரிவுகளிலுள்ள பாடநூல்கள் மட்டும் மறுசீரமைக்க பரிந்துரைத்திருந்தது.

I. அடிப்படை இயந்திரவியல் (Basic Mechanical Engineering)
II. அடிப்படை மின்பொறியியல் (Basic Electrical Engineering)
III. அடிப்படை மின்னனு பொறியியல் (Basic Electronics Engineering)
IV. நெசவியலும் ஆடை வடிவமைப்பும் (Textiles and Dress Designing )
V. செவிலியம் (Nursing)
VI. வேளாண் அறிவியல் (Agricultural Sciences)
VII. அலுவலக மேலாண்மையும் செயலியலும் தட்டச்சு கணினி பயன்பாடுகளும் (Office Management and Secretary Ship and Typography Computer Application)
VIII. கணக்குப்பதிவியலும் தணிக்கையியலும் (Accountancy and Auditing)

பாடநூல் வல்லுநர்கள், மேலாய்வாளர்கள், பாடநூல் ஆசிரியர்கள், தொழில்நுட்ப பாடநூல் வல்லுநர்கள், அரசு தொழிற்பயிற்சி நிறுவன பயிற்றுநர்களுடன் இணைந்து மேல்நிலை வகுப்பில் தற்போது நடைமுறையில் உள்ள தொழிற்கல்வி பாடத்திட்டத்துடன் துறைசார்திறன் கழகம் (Sector Skill Council) பரிந்துரைத்த பாடத்திட்டத்தையும் இணைத்து மேற்கண்ட 8 பாடநூல்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு

மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை வளப்படுத்தி மாணவர்கள் படித்து முடித்தவுடன் பல்வேறு திறன்சார்ந்த பணிகளுக்கு செல்ல ஏதுவாக **தொழிற்சாலை சார்ந்த திறன்களை முழுமையாகப் பெற்றுள்ளனர்** என்ற (Industry-Approved Skill Completion Certificate) தகுதிச்சான்றிதழை பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

வரிசை எண். (i) முதல் (vi) வரையிலான தொழிற்கல்வி பாடப்பிரிவுகளுக்கு கருத்தியல் (Theory) மற்றும் செய்முறை (practical) ஆகிய இரண்டும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

வரிசை எண். (vii)-ல் இடம்பெற்றுள்ள அலுவலக மேலாண்மையும் செயலியலும் பாடப்பிரிவிலுள்ள அலுவலக மேலாண்மையும் செயலியலும் கருத்தியல் பாடமும், தட்டச்சு கணினி பயன்பாடுகள் செய்முறை பாடமும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

வரிசை எண். (viii)ல் இடம்பெற்றுள்ள கணக்குப்பதிவியலும், தணிக்கையியலும் என்ற பாடப்பிரிவில் தணிக்கையியல் செய்முறைப் பாடமும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இதர கீழ்கண்ட நான்கு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டமே தொடரும்.

1. அடிப்படை கட்டடப் பொறியியல் (Basic Civil Engineering)
2. அடிப்படை தானியங்கி ஊர்தி பொறியியல் (Basic Automobile Engineering)
3. நெசவியல் தொழில்நுட்பம் (Textile Technology)
4. உணவக மேலாண்மை (Food Service Management)

அனைத்து 12 தொழிற்கல்வி பாடப்பிரிவுகளிலும் (அலுவலக மேலாண்மையும் செயலியலும் தட்டச்சு கணினி பயன்பாடுகளும் நீங்கலாக) இடம்பெற்றுள்ள **'கணினித் தொழில்நுட்பம்'**(Computer Technology) மற்றும் **'கணினிப் பயன்பாடுகள்** (Computer Applications) என்ற பாட நூல்களுக்கு மாற்றாக மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்தும் வகையில் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** என்ற புதிய பாடம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மறுசீரமைக்கப்பட்ட எட்டு பாடநூல்களுக்கு புதியதாக அச்சடித்து வழங்கப்பட்டுள்ள பாடங்களையும், மறுசீரமைக்கபடாத நான்கு பாடநூல்களுக்கு ஏற்கெனவே நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள பாடங்களையும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மேலும் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** என்ற புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மேல்நிலை பள்ளிகளில் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்படும் மாணவர் சேர்க்கை விண்ணப்ப படிவங்களில் **'கணினித் தொழில்நுட்பம்'**(Computer Technology) மற்றும் **'கணினிப் பயன்பாடுகள்** (Computer Applications) என்ற பாடத்திற்கு மாற்றாக **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** பாடம் இடம்பெறும் வகையில் அச்சடிக்கப்பட்டு அந்த விண்ணப்பங்களில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டுமென்றும், இப்பாடத்தினை பின்வரும்

ஆசிரியர்களை கொண்டு மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Vocational Teachers) / தொழிற்கல்வி பயிற்றுநர்கள் (Vocational Trainers)
- இப்பாடநூலில் உள்ள கணினி சார்ந்த பாடங்களை மட்டும் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் கணினி பயிற்றுநர்கள் / கணினி பயிற்றுநர்கள்-நிலை I-ல் பணிபுரியும் ஆசிரியர்கள் (Computer Instructors/ Computer Instructors Grade-I) கொண்டு கற்பித்தல் வேண்டும்.
- மேலும், அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்களில் பாடவேளைகள் குறைவாக உள்ள ஆசிரியர்களையும் இப்பாடநூலை கற்பிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழிற்கல்வி பாடப்பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் திறன்கள் என்ற பாடநூலினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் வரும்நாட்களில் online / e-content வழியாக பயிற்சி வழங்கப்படும் .

மேற்கண்டவாறு அறிவுரைகளைப் பின்பற்றி தொழிற்கல்வி பாடப்பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாடநூல்களை மாணவர்களுக்கு பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொண்டு அவர்களது எதிர்கால உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த உரிய அறிவுரைகளை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்குமாறு அனைத்து மாவட்டமுதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக
01/8/22

பெறுநர்
அனைத்து மாவட்டமுதன்மைக் கல்வி அலுவலர்கள்
நகல்
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளி, சென்னை-6.
இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-6. ( தகவலுக்காக அனுப்பப்படுகிறது)

**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள்,**

**சென்னை–6**

**ந.க.எண்.50510/பிடி 2/இ2/2021, நாள்01.08.2022**

*****

**பொருள்:** பள்ளிக் கல்வி – அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் வேலை வாய்ப்புத் திறன்கள் என்ற புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது – முதல் பருவத் தேர்வு நடத்துதல் – சார்ந்து.

**பார்வை:** சென்னை–6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், ந.க.எண்.50510/பிடி2/இ2/2021, நாள்.[illegible].08.2022.

------

அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு 2022–2023 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு தொழிற்கல்வி பாடப்பிரிவில் (அலுவலக மேலாண்மை தவிர்த்து) **வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills)** என்ற புதிய பாடம் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, இப்பாடத்தினை மாணவர்களுக்கு கற்பிப்பது சார்ந்து பார்வையில் காணும் செயல்முறைகளில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இப்பாடம் தற்கால மாணவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டு தொழிற்கல்வி பிரிவிலுள்ள கணினி தொழில் நுட்பம் (Computer Technology) / கணினி பயன்பாடுகள் (Computer Applications) என்ற பாடத்திற்கு மாற்றாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடம் புதியது என்பதாலும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுக நிலையிலுள்ளதாலும் மாணவர் நலன்கருதி இக்கல்வியாண்டில் **ஆகஸ்ட் 2022ல்** நடைபெறும் முதல் பருவ தேர்விற்கு **பள்ளி அளவிலேயே முதல் பாடத்திலிருந்து மட்டும் (Chapter 1) கேள்வித்தாள்** தயாரித்து மதிப்பீடு செய்து கொள்ள பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் "வேலைவாய்ப்புத் திறன்கள்" என்ற இப்பாடநூலை tnschools.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

01/8/22

**இணை இயக்குநர் (தொழிற்கல்வி)**

**பெறுநர்**

**அனைத்து மாவட்டமுதன்மைக் கல்வி அலுவலர்கள்**

**நகல்**

**இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6. ( தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)**